
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1126

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

104

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## வகுப்புரிமை கேட்பது விஷமா?

*1937*-இல் நடைபெறவிருந்த சட்டமன்றத் தேர்தலுக்குத் தயாராகிக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சி, நீதிக்கட்சியை அனைத்து வகைகளிலும் கடுமையாகத் தாக்கி பிரச்சாரம் செய்துகொண்டிருந்த காலகட்டம் அது. நீதிக்கட்சியின் முன்னணித் தலைவர்களும் மறைந்துவிட, அக்கட்சியை வலுப்படுத்த வேண்டிய பொறுப்பை ஏற்றிருந்த பெரியார், தொடர்ந்து ஊர் ஊராகச் சென்று கூட்டங்களில் பங்கேற்றுப் பேசினார், ஆலோசனைகள் வழங்கினார், திட்டங்களை முன்வைத்தார்.

இந்தச் சூழலில்தான், ‘மதுரை ஜில்லா ஜஸ்டிஸ் மகாநாடு’ முடிந்த ஆறே நாட்களில், ‘பழனி தாலுகா ஜஸ்டிஸ் மகாநாடு’ 18.07.1936 அன்று நடைபெற்றது.

ஜெயராம் தியேட்டரில் பி.ரெங்கசாமி தலைமையில், இம்மாநாடு நடைபெற்றது. சௌந்தரபாண்டியனார் கொடியேற்றி, உரையாற்றினார். அடுத்து, அமைச்சர் பி.டி.ராஜன் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். வரவேற்புரையாற்றிய கே.அருணாச்சலம், “சென்னை மாகாணத்தைப் பொறுத்தமட்டிலும், பார்ப்பனரல்லாதோரின் முன்னேற்றங்களுக்கு ஜஸ்டிஸ் கட்சி எத்தனையோ நன்மைகள் செய்துகொண்டிருப்பதைப் புள்ளி விவரங்களுடன் எடுத்துக்காட்டலாம். பார்ப்பனரல்லாதோர் இயக்கத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற எண்ணம், சத்தியமூர்த்தி மனதில் நெடுநாள் குடிகொண்டிருந்தது. காங்கிரஸ் அறுபது ஆண்டுகள் கடந்தும் 19-ம் நூற்றாண்டுக்கே மீண்டும் செல்கிறது. ஜஸ்டிஸ் கட்சியோ

ஓவியம் : சிகரன்




பதினைந்து ஆண்டுகள் கடந்த பாலபருவம். ஆனால், ஒரு மாமாங்கத்துக்குள் ஒரு நூற்றாண்டுப் பணியைச் செய்திருக்கிறது” என்றார்.

தலைமை உரையாற்றிய பி.ரெங்கசாமி, “நமது கட்சியின் முக்கியமான நோக்கம் என்னவென்றால், பிரிட்டிஷ் அரசாங்கத்தில் ஓர் அங்கமாக இருந்து, சட்டப்பூர்வமான வழியில் சுயராஜ்ஜியம் பெற வேலை செய்வதுதான். இன்னும் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றமடையும்படி செய்வதும், எல்லா வகுப்பினருக்கும் சாதி - மத பேதமில்லாமல் எல்லா துறைகளிலும் சமத்துவமான சந்தர்ப்பத்தை அளிப்பதுமே யாகும். பிராமணர் அல்லாதோர் இயக்கத்தின் பலனாக ஜஸ்டிஸ் கட்சி ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் கூட, பிராமணர்களின் நியாயமான உரிமைகளை அடையும்படியே செய்யப்பட்டு வந்தது. எந்த வகுப்பினரைச் சேர்ந்தவர்களும் ஜஸ்டிஸ் கட்சியாரிடமிருந்து தங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்காமல் போய்விடும் என்று கருத வேண்டியதில்லை” என எல்லோருக்கும் எல்லாவற்றையும் செய்து தருவதே நீதிக்கட்சியின் கொள்கை என்பதை விளக்கினார்.

பின்னர் கிருஷ்ணன், பட்டுக்கோட்டை அழகிரி, அ.பொன்னம்பலனார், சாமி சிவநேசம், எம்.எஸ்.கனகராஜன் ஆகியோர் அடுத்தடுத்துப் பேசினர். அதன்பின்னர், நீதிக்கட்சிக்கென விரைவில் தமிழ் தினசரி ஒன்றை தொடங்க வேண்டும், தமிழ்நாடு முழுக்க பிரச்சாரத்தைத் தொடர வேண்டும் என்பன உள்ளிட்ட முக்கிய தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

விருதுநகரில், நடைபெற்ற ராமநாதபுரம் ஜில்லா மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட பெரியாரின் வேலைத்திட்டத்தை இம்மாநாடு மனப்பூர்வமாக ஆதரித்தது. அதனையடுத்து தீர்மானங்களை விளக்கிப்பேசிய பெரியார், “தஞ்சையில் சமீபத்தில் பேசிய சத்தியமூர்த்தியார், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை கேட்கும் ராமசாமியை நான் வரவேற்கிறேன் என்றும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விசயத்தில் சீக்கிரமாய் காங்கிரசிலிருந்து ஒரு அறிக்கை விடுவதன் மூலமாக அதைச் சரிப்படுத்துகிறேன் என்றும் கூறிவிட்டு, மறுபடியும் நாலு நாளில் ‘வகுப்புவாதம் பேசுவது விஷம்’ என்று சொன்னால், அது எப்படி யோக்கியமான பேச்சாகும்?

வகுப்புவாதம் யார் ஆரம்பித்தது? வகுப்புரிமை அளவுக்கும் தகுதிக்கும் மேல் அனுபவிப்பது யார்? வகுப்புவாதம் பேச வேண்டிய அவசியம் யாரால் ஏற்பட்டது?” என்று அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினார்.

இறுதியாக, மத்திரன் பாடல்களுடன் கூட்டம் முடிவுற்றது.

**...கூட்டம் திரளும்**

## சீழ் வழியும் புண் மீது பட்டுத்துணி!

**தே**சிய இடைநிலைக் கல்வி வாரியம் வெளியிட்டுள்ள ஒரு பாடப்புத்தகத்தில், நீதித்துறை குறித்த விமர்சனம் வைக்கப்பட்டுள்ளது. அதற்காக, உச்சநீதிமன்றம் தானாக முன்வந்து வழக்குப்பதிவு செய்து, அந்தப் பாடப்புத்தகங்களைக் கைப்பற்றி மொத்தமாக அழிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளதற்கு, சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதி சந்துரு விமர்சனத்தை முன் வைத்துள்ளார். ‘இந்து தமிழ் திசை’ பத்திரிகையில் வெளியான அந்தக் கட்டுரையை மேற்கோளிட்டு, அரசியல் விமர்சகர் ராஜராஜேந்திரன் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

“திருடர்களில் அதிகம் மோடிகள் இருக்கிறார்களே’ என லலித் மோடியை, நீரவ் மோடியை, ராகுல் குத்திக்காட்டிப் பேசினால், மோடி என்கிற ஒட்டுமொத்த இனத்தையே அவர் இழிவு செய்துவிட்டாரென அவருக்குச் சிறைதண்டனை அளித்து, பதவி நீக்கம் செய்தவர் யார்?

கூட்டுத்தொகையை வேண்டுமென்றே தப்பாகப் போட்டு, வருவாய்க்கு அதிகமாக 10% சொத்து, கூடுதலாக இருந்தால் தப்பில்லை என்று ஒரு அக்மார்க் ஊழல்வாதியை இரண்டாண்டுகள் இந்த நாட்டை ஆளவிட்டது யார்? இத்தனைக்கும் தீர்ப்பு வந்த இரண்டு மணி நேரத்திலேயே உலகம் முழுக்க அந்த கூட்டுத்தொகைப் பிழையைக் கண்டு பிடித்துவிட்டார்களே?

சமீபத்தில், வந்த ஒரு தீர்ப்பைப் பாருங்களேன். ‘புதிய மதுபானக் கொள்கையில், பல கோடி ஊழலை அர்விந்த் கெஜ்ரிவாலும், மணீஷ் சிசோடியாவும் செய்தார்கள்’ என அவர்கள் முதலமைச்சராக, துணை முதலமைச்சராக இருந்தபோதே கைது செய்தார்கள். ஒண்ணுமே இல்லாத ஒரு வழக்கில், பல மாதங்கள் பிணையே தராமல் ஜெயிலில் வைப்பதென்ன? அவமானப்படுத்துவது என்ன? அவர்கள் பதவிகளில் இருப்பது நெருடுகிறது என்று பதவிகளைப் பறிப்பதென்ன? பொய்களால் ஆட்சியையே திருடுவதென்ன? கடைசியில், அது ஜோடிக்கப்பட்ட வழக்கு, ஒரே ஒரு ஆதாரம் கூட இல்லை என விடுதலை செய்வது என்ன? இப்படி, பல சிக்கல்கள் இருக்கையில், இந்த வரலாற்றையும், நல்ல தீர்ப்புகளுக்கான வரலாற்றையும் பாடமாக வைப்பதில் என்ன உறுத்தல்?

இருந்தாலும், இதை எழுதுவதில் எனக்கு தயக்கம் இருந்தது. ஏனெனில் பாடங்களை வடிவமைப்பது ஒன்றிய அரசு. ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தில்தான் அது வரவிருந்தது. சங்கிகள் அப்படி ஒன்றும் நடுநிலையாளர்கள் கிடையாதே? இவர்களுடைய முழுக்கட்டுப்பாட்டில் நீதிமன்றங்களை இயக்கத் துடிக்கும் இவர்களா, நீதிமன்றங்களுக்கெதிராக எழுதப் போகிறார்கள் என நினைத்தேன். காத்திருந்தது வீண் போகவில்லை” என நீதிபதி சந்துரு அவர்களின் கட்டுரையைப் பகிர்ந்துள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### கழகமே குடும்பம், குடும்பமே கழகம்!



வரவணை செந்தில்

**எ**னது சித்தப்பா பெரியண்ணன் (எ) முத்துக்காமாட்சி, இந்தி எதிர்ப்புப் போரில், 14 வயதில் வயிற்றில் குண்டு பாய்ந்து உயிர் பிழைத்தவர். அவர் 2002-ஆம் ஆண்டு மார்ச் 3-ஆம் தேதி அன்று விபத்தில் இறந்துவிட்டார். மாண்புமிகு அமைச்சர் இ.பெரியசாமி அவர்களின் நெருங்கிய சகாவாக இருந்தவர். அவரின் மரணச்செய்தி அறிந்து, மே மாதத்தில் மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் வந்த அன்றைய இளைஞர் அணி செயலாளர், இன்றைய கழகத் தலைவர் வீட்டிற்கே வந்து படத்திறப்பு செய்து ஆறுதல் கூறினார். ‘கழகம் என்பது ஒரு குடும்பம்’ என்பதற்கு இந்தப் படமே சாட்சி. அப்போது நான் இளைஞர் அணியில் இருந்தேன்.

**- வரவணை செந்தில்,**
**ஊடகவியலாளர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

104


**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## மறைந்தும் வாழ்வார்!

**கா**ன்பூரில் 1925-ஆம் ஆண்டு டிசம்பர் 26-இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்ட அதே நாளில், இந்தியாவின் தென்கோடியில் உள்ள ஒரு கிராமத்தில் பிறந்தவர் ‘தகைசால் தமிழர்’ இரா.நல்லகண்ணு அவர்கள். தோழர்களாலும் கட்சி வட்டாரத்திலும் ‘ஆர்.என்.கே.’ என்றழைக்கப்பட்டவர் தனது 101-வது வயதில் நீண்ட நெடுங்கால சமூகத் தொண்டுக்குச் சொந்தக்காரராக அனைவராலும் நேசிக்கப்பட்ட ஒரு வர்க்கப் போராளியாக மறைவெய்தியுள்ளார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்குபெற்ற அருகி வரும் தலைமுறையைச் சேர்ந்த ஒருவர் மறைந்திருப்பது, ஈடுசெய்ய முடியாத இழப்பு.

அவருடைய 80-வது வயதையொட்டி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வெளியிடப்பட்ட ‘எண்பதாண்டு நிறைவு விழா’ மலரின் மின்னூல் வடிவத்தைத் ‘தமிழ் மின் நூலகம்’ அண்மையில் வெளியிட்டுள்ளது.




இந்திய அளவிலும் தமிழ்நாட்டிலும் முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், திரைத்துறையினர், அறிவு ஜீவிகள் ஆகியோரின் பங்களிப்பில் அரிய பல கோட்டோவியங்களுடனும் காண கிடைக்காத புகைப்படங்களுடனும் தயாரிக்கப்பட்டுள்ளது இந்த மலர்.

குறிப்பாக, தலைவர் கலைஞர், பேராசிரியர், ஆசிரியர் கி.வீரமணி, இடதுசாரி இயக்கத் தலைவர்களான பிரகாஷ் காரத், ஏ.பி.பரதன், என்.சங்கரய்யா ஆகியோரின் வாழ்த்துச் செய்திகளுடன் பல சுவாரசியம் நிறைந்த வரலாற்றுத் தகவல்களையும் கொண்டிருக்கிறது இந்த மலர்.

நூற்றாண்டை நிறைவுசெய்துள்ள கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாறு தோழர் நல்லகண்ணு அவர்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாகவே வளர்ச்சி பெற்று வந்ததை, இதில் உள்ள பல்வேறு கட்டுரைகள் உணர்த்துகின்றன.

அரசியல் கல்விக்காக அவர் மேற்கொண்ட, ‘மாஸ்கோ பயணம்’, ‘கிழக்கு ஜெர்மனி பயணம்’ மற்றும் சீனப் பயணங்களின் போது, மேற்கத்திய உடையில் அவர் இடம்பெற்றிருக்கும் புகைப்படங்கள் இந்த மலரின் மதிப்பைக் கூட்டி உள்ளன. புகைப் படங்களுக்காகவே அர்ப் பணிக்கப்பட்டுள்ள 50 பக்கங்களின் வழியாக, அவரது போராட்ட வாழ்க்கையை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

தோழர் ஆர்.என்.கே எழுதிய சில கட்டுரைகள், ஜீவா மறைந்து அவரை எரியூட்டிய பிறகு, பிராட்வே ‘ஜனசக்தி’ அலுவலகத்துக்கு வந்து அவர் எழுதிய “குற்றாலம் அருவியிலே ஜீவா - நீ குளித்து நிற்கையிலே வற்றாத தமிழ்க் கடலும் வந்து நிற்குதென்பேன் வற்றாத தமிழ்க் கடலும் வறண்ட விறகாகி பற்றி எரியக் கண்டேன் பார்த்த மனம் பதறுதையா” என்ற உணர்ச்சி மிகு கவிதை ஆகியவை அவரது எழுத்தாளுமைக்குச் சான்றாக திகழ்கின்றன.

தனது சமகாலத் தலைவர்கள், இளம்தலைமுறையினர், பல்வேறு துறை சார்ந்த ஆளுமைகளிடம் தனது பண்புக்காகவும், உறுதி குலையா போராட்ட குணத்திற்காகவும் நினைவுகூரப்படும் தோழர் ஆர்.என்.கே. அவர்களின் 80 ஆண்டுக்கான அரசியல் பணிகளை ஆவணப்படுத்தி இருக்கும் இந்த மலரை, அவரை இழந்து வாடும் அனைவரும் வாசித்து உள்வாங்குவதே அவருக்கு சிறந்த அஞ்சலியாக இருக்கும்.

நூலை வாசிக்க, QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

**...வாசிப்போம்.**

## கழகம் உருவான வரலாறு

### ஏடுகளும் எதிர்க்கட்சிகளும்...

1978-ஆம் ஆண்டு, ஏப்ரல் - மே மாதங்களில், கழகத்தின் ஒன்றிய - நகர - நகரிய அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடைபெற்றன. தேர்தல்களில் பலத்த போட்டி நிலவியது. கழகம் ஆட்சியைப் பிடிக்க முடியாமல் தோல்வியைத் தழுவிய நிலையிலும், தி.மு.கழகமே அழிந்து ஒழிந்து விட்டது என்று ஏடுகளும் எதிர்க்கட்சிகளும் வர்ணித்த நிலையிலும், அமைப்புகளில் பொறுப்பு வகிப்பது யார் என்பதிலே கழகத் தோழர்கள் மத்தியில் பெரும் போட்டி நிலவியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131